# சட்டத்தோடு மோதுவோம்!

பெரியார் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! இன்று நடைபெறும் கள்ளை வட்ட திராவிடர் விவசாய தொழிலாளர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு எனக்கு அளித்தமைக்கு திராவிடர் கழகம், திராவிடர் விவசாய தொழிலாளர் கழகம் ஆகியவற்றிற்கு நான் என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி மாநாடுகளுக்குத் தலைமை தாங்கும் தகுதியும், திறமையும் எனக்கு இல்லை என்றே கருதுகிறேன். என்னைத் தலைமை ஏற்குமாறு வழிமொழிந்தவர்கள் அன்பின் மிகுதியால் பெரிதும் புகழ்ந்தார்கள். வள்ளுவர் குறளாகிய "அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்" என்றபடி அன்பின் மிகுதியால் கூறினார்கள் என்று அவற்றை ஏற்றுக் கொள்கிறேன். இதைப் பெண்கள் மாநாடு என்றே அழைத்திருக்கலாம். ஏனெனில், தலைவரும், திறப்பாளரும், கொடியேற்றிய வரும் பெண்களாகவே அமைந்து விட்டார்கள். நான் விவசாயியாக இல்லா விட்டாலும் ஒரு சில கருத்துகளைப் பேசுகிறேன்.

நாட்டில் விவசாயிகளின் பேரால் பல கட்சிகள் உள்ளன. காங்கிரஸ் விவசாயிகள் கழகம், கம்யூனிஸ்ட் கழகம், சோஷியலிஸ்ட்கள் கிஸான்கள் சங்கம் என்று பல கட்சிகள் உள்ளன. அவையெல்லாம் உண்மையிலேயே விவசாயிகளுக்கு எந்தவிதப் பலனையும் பெற்றுத் தரவில்லை. ஆகவே, விவசாயிகள் தொழிற் சங்கம் ஒன்று நிறுவினோம். அது ஓராண்டு காலமாகவே பணியாற்றி வருகிறது. மற்றக் கட்சிகளால் எவ்வித நிவாரணமும் பெறவில்லை. ஆகவே, தொழிலாளர்களுக்கு உண்மை வழி எது என்பதைக் காட்டவே இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பொதுவாக எல்லாத் தொழிலாளர் களும் திராவிடர்களே. பார்ப்பனர் எவரும் தொழிலாளர்களாக இல்லை. ஆகவே, தொழிலாளர்களுக்கு உண்மை வழி எது என்பதைக் காட்டவே இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே, நம் திராவிடர்கள் நிலைமை உயர வேண்டும். வாழ்வு முன்னேற வேண்டும். மேம்பாடான நிலைமையைப் பெறவேண்டும். அந்த நிலைமையைப் பெற்றுத் தரவே ஸ்தாபன ரீதியாக இது பணியாற்றி வருகிறது. இதனால் விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

பொதுவாக முதலாளி - தொழிலாளி என்ற போராட்டம் தொடங்குவதே கூலி உயர்வுக்காக இருக்கின்றது. அதே பாதையிலேயே விவசாயிகள் - தொழிலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அதனால் என்ன பயன் பெற முடியும்?

இன்று முதலாளிகளாக இருப்பவர்கள் யார் என்று பாருங்கள். பிறவியிலேயே முதலாளிகளாக பிறந்துவிடவில்லை. பார்ப்பனர்களும், சைவர்களும் தவிர, மற்ற மிராசுதாரர்கள், முதலாளிகள் எல்லோரும் பாடுபடும் விவசாயிகளாக இருந்தே படிப்படியாக உயர்ந்து மேட்டுக்குடியினராக ஆனார்களே ஒழிய, வேறு முறையில் அல்ல. இப்படிப்பட்ட முதலாளிகளிடம் தொழிலாளர்கள் மோதுவதால் சுமுகமான நிலை

ஏற்படாது. இப்படிப் பேசுவதனால் முதலாளிகள், மிராசுதாரர்கள் ஆகியோருக்குச் சார்பாகப் பேசுவதாக நீங்கள் கொள்ளக்  கூடாது.

உண்மையிலேயே கூறுகிறேன், தொழிலாளர்கள் மிராசுதாரர் களிடம் மோதிப் பயன் இல்லை. அவர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது மோதவேண்டும். அரசாங்கம்தான் மிராசுதாரர்களைப் பாதுகாக்கிறது. அதுதான் தொழிலாளர்களைத் தொழிலாளர்களாகவே வைத்திருக்கிறது. அவர்கள் மிராசுதாரர்களின் கொடுமையிலிருந்து மீளச் சட்டத்தில் இடமில்லை.

மக்களுக்கு உணவும், உடையும்தான் முக்கியம். தொழிலாளர்கள் நிலை சீர்பெற வேண்டுமானால், பெரியார் அவர்கள் பாதை வழியே ஒற்றுமை, கட்டுப்பாடு, கண்ணியம் ஆகியவற்றைக் கைக்கொண்டு பணியாற்ற வேண்டும்.

*(கள்ளக்குறிச்சி வட்டத் திராவிட விவசாய தொழிலாளர் மாநாட்டிற்குத் தலைமை வகித்து ஆற்றிய உரை)*

***- "விடுதலை" (5-10-1953)***